DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 164/2009 |
| Deposition of Witness for | Prosecution PW 6 |
| Name | சுப்பிரமணியன் |
| Father / Husband Name | கண்ணையா |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 20th March 2024.

---

**(1வது எதிரி இறந்துவிட்டார்)**

**(2 முதல் 9 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 9 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் கோரவலசையில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது அண்ணன் ராமரின் மனைவி. பெரியஅண்ணனின் பேரன்கள் எனது அண்ணன் ராமுவின் மகளை பெண் கேட்டார்கள். எனது அண்ணன் திருமணம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு 2 மாதத்தில் சுமார் 04.00 மணியளவில் எனது அண்ணன் ராமு மற்றும் அவரது மனைவி அவரது பக்கத்து வீட்டில் வசிக்கும் மணி, ரங்கசாமி, அழகர்சாமி மற்றும் எனது மனைவி பொன்னாத்தாள் ஆகியோர்கள் எனது அண்ணன் வீட்டருகே இருந்த போது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து பெண்ணை கேட்டாள் கொடுக்கமாட்டாயா என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள். இருதரப்பினருக்கும்

இடையே வாக்குவாதம் ஆகிவிட்டது. அப்போது அங்கு வந்த எதிரி சந்திரன் அரிவாள் கம்பால் என்னை வலது கை மற்றும் தலையின் வலது பக்கத்திலும் அடித்தார்.

2) பூசைதுரை என்பவர் எனது அண்ணன் ராமுவை அடித்து காலில் காயம் ஏற்பட்டது. அங்கு நடந்த சண்டையில் எதிரிகள் எனது மனைவியையும் எனது அண்ணன் மனைவியையும் அடித்து ரத்தக் காயம் ஏற்படுத்தினார்கள். சண்டையை விலக்கிவிட வந்த மணி, ரங்கசாமி, அழகர்சாமி ஆகியோர்களையும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். அ.சா.1 தான் சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தார். காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தப் பிறகு நாங்கள் அனைவரும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக காயம்பட்ட அனைவரும் மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்றுவிட்டோம். போலீசார் என்னை மருத்துவமனையில் இருக்கும் போது வந்து விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயம் என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது அண்ணன் ராமு, பூரணம், ராமுவின் மகள் மாதவி ஆகியோர்கள் இருந்தார்கள். சண்டை நடந்து எவ்வளவு நேரம் கழித்து அந்த இடத்திற்கு வந்தேன் என்றால் எதிரிகள் ராமுவிடம் சத்தமாக பேசிக்கொண்டிருக்கும் போது வந்தேன். எதிரிகளை நாங்கள் தாக்கியதாக எங்கள் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்களை தாக்க வரும் போது நாங்கள் ஒதுங்கிக் கொண்டோம். அவர்களை நாங்கள் அடிக்கவில்லை.

2) இந்த வழக்கில் நான் எதுவும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை பூரணம் தான் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் ஆமாம். எப்போது என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை. நான், மணி, அழகர்சாமி, ரங்கசாமி, பொன்னாத்தாள் ஆகியோர்கள் ரத்த உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் மேலச்சேத்தூரைச் சேர்ந்த வெளியூர்காரர்கள். அவர்கள் இந்த ஊருக்கு எதற்காக வந்தார்கள் என்றால் ராமுவுடன் எதிரிகள் பிரச்சனை செய்து தாக்கியதால் அதை விலக்கி விடுவதற்காகத் தான் மேற்படி நபர்கள் அங்கு வந்தோம். 1 வது எதிரி பூசைத்துரை யாரை அடித்தார் என்றால் ராமுவை அடித்தார்.

3) பூசைத்துரை ராமுவை எந்த இடத்தில் அடித்தார் என்றால் முழுங்கால் மற்றும் கட்டைவிரலில் அடித்தார். என்னை சந்திரன் அடித்ததால் நான் மயக்கமாகிவிட்டேன். நான் மயக்கத்தில் இருந்ததால் யார் யாரை அடித்தார் என்று குறிப்பிட்டுத் தெரியவில்லை. எனது தரப்பில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு

குறிப்பிட்டுத் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் தான் எதிரிகளைத் தாக்கி காயப்படுத்தி அது தொடர்பான வழக்கில் ஆஜராகி வருகிறோம் என்றால் நாங்கள் அவர்களை அடிக்கவில்லை வழக்கில் ஆஜராகி வருகிறோம். நாங்கள் தாக்கியதில் தான் எதிரிகள் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்றால் நாங்கள் யாரையும் அடிக்கவில்லை ஆனால் எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள்.

4) நாங்கள் எத்தனை நாள்கள் மருத்துவமனையில் இருந்தோம் என்றால் நான் 20 நாள்கள் சிகிச்சையில் இருந்தேன். மற்ற நபர்கள் 10 நாள்களில் சிகிச்சையிலிருந்து வந்துவிட்டார்கள். எதிரிகள் எத்தனை நாள்கள் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் தெரியவில்லை. காயம்பட்ட என்னை யார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் மயக்கமாக இருந்ததால் யார் சேர்த்தார்கள் என்று தெரியவில்லை. எதிரிகள் காயம்பட்டு மருத்துவமனைக்கு எவ்வாறு சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

5) இரண்டு தரப்பினருக்கும் இடையே ஏற்கனவே சிவில் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தான் எதிரிகளைத் தாக்கி காயப்படுத்தினார் என்றாலும் எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எனது தரப்பில் வந்த நபர்களால் எதிரிகளைத் தாக்கும் போது எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என்னைத் தாக்கியது சந்திரன். சந்திரனை நான் தாக்கினேனா என்றால் இல்லை எங்கள் தரப்பில் யாரும் அவர்களை அடிக்கவில்லை. சாட்சி ராஜ்அமுதன் எனக்கு என்ன உறவினர் என்றால் ஆமாம். முறைக்கு எனக்கு மருமகன். அவரது அம்மா பிறந்தது எனது ஊர் என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 20.03.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.